முருகப்பெருமான் துணை

**மகான் வேதாந்தச்சித்தர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

21.06.2022, செவ்வாய்கிழமை

1. தரணிக்கு தவமாகக் கிடைத்த
தனிப்பெருங் கருணை வடிவான
சரவணப் பிரியனின் அவதார
சற்குருவே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது மிதுன திங்கள்
வரங்களென சப்தமதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 07 நாள், 21.06.2022 செவ்வாய்கிழமை)
வழங்குவேன் அருளாசி தன்னை
3. தன்னையே வேதாந்தச் சித்தரும்
தரணியோர் ஞானம்பெற உரைப்பேன்
அண்ணலாக அரங்கன் காட்டும்
ஆற்றல்மிக்க சன்மார்க்க வழிதனை
4. வழிதனை உலக மக்கள்
வணங்கி பின்பற்றி வர
பழிபாவம் நேரா பெருவாழ்வு
பாதுகாப்புத் தரும் வண்ணம்
5. வண்ணமுடன் சொல் செயல்
வகைபட அனைத்தும் ஞானமாக
எண்ணமதில் தூய்மை கூடி
எல்லாம் இறைவன் செயல்எனும்
6. எனும் பெருந்தன்மை ஆகி
எங்கும் பேதம் பகைமை கருதா
ஞானவான்களாக மாற்றம்
ஞாலமதில் உலகோர் கண்டு
7. கண்டு தேறுவர் அரங்கனால்
கலியிடரை வென்று மீள்வர்
தொண்டு செய்யும் பக்குவமும்
தெய்வ பலமெனும் சக்தியும் கூட்டி
8. கூடியே உலகமக்களெல்லாம்
குருராஜன் வழிகாட்டலால்
இடர்கள் பேரிடர்கள் என
எல்லா சிக்கலையும் கடந்து
9. கடந்துமே அமைதி மிக்க
கருணை நிறைந்தவர்களாக
தடையற ஆபத்துச் சூழலில்
தன்னார்வ தொண்டுபுரிபவர்களாக

10. ஆகவே அரங்கன் தேடலின்
ஆற்றல் மிக்க ஞானப்படைகளாக
செகத்தோர் உருவாகி இனி
சித்திகள் அடைந்து உலகை மாற்றும்

11. மாற்றும் சக்திகளாக ஆகி
மனிதர்கள் ஆட்சியை முடித்து
ஆற்றல் மிக்க ஞான ஆட்சியை
அரங்கன் தூண்டலில் படைப்பர்

அருளாசி முற்றே

–சுபம்–